## 6th Social Science Lesson 23 Questions in Tamil

## 23. உள்ளாட்சி அமைப்பு - ஊரகமும் நகர்புறமும்

1. தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகளில் தவறானது எது?

A) சேலம்

B) திருப்பூர்

C) தஞ்சாவூர்

**D) கரூர்**

**(குறிப்பு: பல லட்சம் மக்கள்தொகையும், அதிக வருவாயும் இருக்கும் ஊர்களை மாநகராட்சியாக தமிழ்நாடு அரசு அறிவிக்கும். தமிழகத்தில் 15 மாநகராட்சிகள் உள்ளன. அவை,**

**1. சென்னை, 2. மதுரை, 3. கோயம்புத்தூர், 4. திருச்சி, 5. சேலம், 6. திருநெல்வேலி, 7. ஈரோடு**

**8. தூத்துக்குடி, 9. திருப்பூர், 10. வேலூர், 11. திண்டுக்கல், 12. தஞ்சாவூர், 13. நாகர்கோவில், 14. ஓசூர்**

**15. ஆவடி )**

2. இந்தியாவின் மிக பழமையான உள்ளாட்சி அமைப்பான சென்னை மாநகராட்சி எந்த ஆண்டு உருவாக்கப்பட்டது?

A) 1588 B) 1596 **C) 1688** D) 1720

**(குறிப்பு: நகர்ப்புறத்தை மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி என்றும் கிராமப்புறத்தை ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி என்றும் பிரிக்கப்படுகின்றன. இவை உள்ளாட்சி அமைப்புகள் எனப்படும்.)**

3. தமிழ்நாட்டில் மாநகராட்சிக்கு அடுத்த நிலையில் உள்ள நகராட்சியில் ______க்கும் அதிகமான மக்கள்தொகை இருக்கும்.

A) 10,000 B) 50,000 **C) 1,00,000** D) 10,00,000

**(குறிப்பு: நகரத்திற்கும், கிராமத்திற்கும் இடைப்பட்ட ஊர். சுமார் 10 ஆயிரம் பேர் வாழக்கூடிய ஊராக இருந்தால் அது பேரூராட்சி எனப்படும்.)**

4. தமிழ்நாட்டில் முதன்முதலில் உருவாக்கப்பட்ட நகராட்சி ________ ஆகும்.

A) அரக்கோணம்

B) அருப்புக்கோட்டை

C) இராசிபுரம்

**D) வாலாஜாபேட்டை**

**(குறிப்பு: வாலாஜாபேட்டை வேலூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது.)**

5. கூற்று 1: நகராட்சிகள் அதிகமாக உள்ள மாவட்டம் பெரம்பலூர் மாவட்டம்.

கூற்று 2: இந்தியாவிலேயே முதல் முறையாக பேரூராட்சி என்ற உள்ளாட்சி அமைப்பு தமிழ்நாட்டில் தான் அறிமுகப்படுத்தப்பட்டது.

**A) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி**

B) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: நகராட்சிகள் அதிகமாக உள்ள மாவட்டம் காஞ்சிபுரம் மாவட்டம்.)**

6. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. மாநகராட்சிக்கு இந்திய ஆட்சிப்பணி அதிகாரி ஒருவர் ஆணையராக இருப்பார்.
2. நகராட்சிகளுக்கு அரசு அதிகாரிகள் நகராட்சி ஆணையர்களாக நியமிக்கப்படுவார்கள்.
3. பேரூராட்சியின் நிர்வாக அலுவலர் செயல் அலுவலர் ஆவார்.

**A) அனைத்தும்**

B) 1, 2 சரி

C) 2, 3 சரி

D) 1, 3 சரி

7. மக்களுக்கும் அரசுக்கும் இடையே இணைப்புப் பாலமாக செயல்படுவது

A) மாவட்ட ஊராட்சி

**B) கிராம ஊராட்சி**

C) பேரூராட்சி

D) மாநகராட்சி

**(குறிப்பு: கிராமங்கள், மக்கள்தொகைக்கு ஏற்ப பல பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன. இதன் பிரதிநிதிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள்,**

- **ஊராட்சி மன்றத் தலைவர்**
- **பகுதி உறுப்பினர்கள்**
- **ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் (கவுன்சிலர்)**
- **மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்.)**

8. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

A) பல கிராம ஊராட்சிகள் ஒன்றிணைந்து ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்பபடுகிறது.

B) ஒவ்வொரு ஊராட்சியிலும் ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் (கவுன்சிலர்) ஒருவர் தேர்ந்தெடுக்கடுப்படுகிறார்.

**C) ஊராட்சி ஒன்றியத் தலைவரை மக்கள் நேரடியாக தேர்தலின் மூலம் தேர்ந்தெடுப்பர்.**

D) வட்டார வளர்ச்சி அலுவலர் (BDO) ஊராட்சி ஒன்றியத்தின் நிர்வாக அலுவலர் ஆவார்.

**(குறிப்பு: கவுன்சிலர்கள் தங்களில் ஒருவரை ஊராட்சி ஒன்றியத் தலைவராகத் தேர்ந்தெடுப்பர். ஊராட்சி ஒன்றிய அளவில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.)**

9. நீலகிரி மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ________ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன.

A) 3 **B) 4** C) 5 D) 6

**(குறிப்பு: விழுப்புரம் மாவட்டத்தில் அதிகப்படியாக 22 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன.)**

10. ________ மக்கள்தொகை என்ற அடிப்படையில் மாவட்டம், மாவட்ட ஊராட்சி எனப்படும் பல பகுதிகளாகப் (District Panchayat ward) பிரிக்கப்படுகின்றது.

A) 1000 B) 10000 C) 20000 **D) 50000**

**(குறிப்பு: பகுதி உறுப்பினர்களைக் கிராம ஊராட்சி மக்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கின்றனர். மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் தங்களின் ஒருவரை மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கின்றனர்.)**

11. கூற்று 1: மாநகராட்சித் தலைவரும் (மேயர்), நகராட்சித் தலைவரும் நேரடி தேர்தல் மூலம் மக்களால் தேர்வு செய்யப்படுகின்றனர்.

கூற்று 2: மாநகராட்சித் துணைத்தலைவரும், நகராட்சித் துணைத்தலைவரும் அந்தந்தப் பகுதி (ward) உறுப்பினர்களால் தேர்வு செய்யப்படுவார்கள்.

A) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

B) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

**C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி**

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

**(குறிப்பு: தொகுதிகள், பகுதிகள் (wards) என அழைக்கப்படுகின்றன. பகுதி உறுப்பினர்களை மக்கள் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கின்றனர்.)**

12. கீழ்க்கண்டவற்றுள் கிராம ஊராட்சியின் விருப்பப் பணிகள் எவை?

1. பூங்கா அமைத்தல்
2. நூலகம் அமைத்தல்
3. விளையாட்டு மைதானம் அமைத்தல்
4. ஊர்ச் சாலைகள் அமைத்தல்

A) 1, 2, 4 B) 2, 3, 4 C) 1, 3, 4 **D) 1, 2, 3**

**(குறிப்பு: <u>கிராம ஊராட்சியின் அவசியப் பணிகள்</u>**

**குடிநீர் வழங்குதல், தெருவிளக்கு அமைத்தல், தெருக்களைத் தூய்மைப்படுத்துதல், கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல், ஊர்ச்சாலைகள் அமைத்தல், மத்திய மாநில அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்.)**

13. கிராம ஊராட்சியின் வருவாய்களில் தவறானது எது?

A) குடிநீர் இணைப்புக்கான கட்டணம்

B) நிலவரியிலிருந்து குறிப்பிட்ட பங்கு

C) கடைகள் மீதான வரி

**D) பொழுதுபோக்கு வரி**

**(குறிப்பு: கிராம ஊராட்சியின் வருவாய்கள்**

**வீட்டு வரி, தொழில் வரி, கடைகள் மீதான வரி, குடிநீர் இணைப்புக்கான கட்டணம், நிலவரியிலிருந்து குறிப்பிட்ட பங்கு, சொத்துரிமை மாற்றம் - குறிப்பிட்ட பங்கு, மத்திய மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீடு)**

14. கீழ்க்கண்டவற்றுள் மாநகராட்சியின் வருவாய்கள் எவை?

1. வீட்டு வரி
2. குடிநீர் வரி
3. தொழில்வரி
4. பொழுதுபோக்கு வரி
5. கடைகள் மீதான வரி

**A) அனைத்தும்**

B) 1, 2, 5

C) 2, 3, 5

D) 1, 2, 4, 5

**(குறிப்பு: மாநகராட்சியின் வருவாய்**

**வீட்டு வரி, குடிநீர் வரி, கடைகள் மீதான வரி, தொழில் வரி, பொழுதுபோக்கு வரி, வாகனக் கட்டணம், மத்திய மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீடு)**

15. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

A) ஒவ்வொரு ஊராட்சியிலும் கிராமசபை அமைக்கப்பட்டுள்ளது.

B) கிராமசபை ஒரு நிரந்தர அமைப்பு ஆகும்.

C) கிராம சபையே மக்களாட்சி அமைப்பின் ஆணிவேராகும்.

**D) கிராமசபைக்கூட்டம் ஆண்டுக்கு மூன்று முறை கூடும்.**

**(குறிப்பு: கிராமசபைக்கூட்டம் ஆண்டுக்கு நான்கு முறை கூடும். ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15, அக்டோபர் 2 ஆகிய நாள்களில் இக்கூட்டம் கூடும். இந்நாள்களைத் தவிர தேவைக்கேற்பவும் அவசர காலங்களிலும் கிராமசபை கூடும். இவை சிறப்பு கிராமசபைக்கூட்டம் எனப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர், வட்டார வளர்ச்சி அலுவலர், ஆசிரியர் போன்றோரும் இக்கூட்டத்தில் கலந்துகொள்வார்கள்.)**

16. தேசிய பஞ்சாயத்து ராஜ் சட்டம் எப்போது கொண்டுவரப்பட்டது?

A) 1991 ஏப்ரல் 24

B) 1991 ஏப்ரல் 26

**C) 1991 ஏப்ரல் 24**

D) 1991 ஏப்ரல் 26

**(குறிப்பு: உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரங்களைப் பரவலாக்குவது என்ற நோக்கத்திற்காகத் தேசிய பஞ்சாயத்து ராஜ் சட்டம் கொண்டுவரப்பட்டது. இப்படியான ஓர் அமைப்பு வேண்டும் என்று இதற்கு இப்பெயர் வைத்தவர் மகாத்மா காந்தி.)**

17. தேசிய ஊராட்சி தினம் எப்போது அனுசரிக்கப்படுகிறது?

A) ஜனவரி 24

B) ஜனவரி 26

**C) ஏப்ரல் 24**

D) ஏப்ரல் 26

**(குறிப்பு: <u>பஞ்சாயத்து ராஜ் சிறப்பம்சங்கள்</u>**

- **கிராமசபை அமைத்தல்**
- **மூன்றடுக்கு ஊராட்சி அமைப்பு**
- **இடஒதுக்கீடு**
- **தேர்தல்**
- **பதவிக்காலம்**
- **நிதிக்குழு**
- **கணக்கு மற்றும் தணிக்கை)**

18. 2011இல் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் பெண்கள் எத்தனை சதவீத இடங்களில் வெற்றிபெற்றனர்?

A) 33% B) 35% **C) 38%** D) 39%

**(குறிப்பு: அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் பெண்கள் பங்கேற்கும் வகையில் 33% இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.)**

19. ________ ஆண்டு தமிழக அரசு பெண்களுக்கு உள்ளாட்சியில் 50% இட ஒதுக்கீடு வழங்க சட்டத்திருத்தம் செய்துள்ளது.

A) 2014 **B) 2016** C) 2017 D) 2018

20. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

A) உள்ளாட்சி பிரதிநிதிகளின் பதவிக்காலம் 5 ஆண்டுகள்.

**B) மத்திய தேர்தல் ஆணையம் உள்ளாட்சித் தேர்தலை நடத்துகிறது.**

C) ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு மாநிலத் தேர்தல் ஆணையம் உள்ளது.

D) தமிழகத்தின் தேர்தல் ஆணையம் சென்னை கோயம்பேட்டில் உள்ளது.

**(குறிப்பு: மாநில தேர்தல் ஆணையம் உள்ளாட்சித் தேர்தலை நடத்துகிறது.)**

21. மாநகராட்சியின் தலைவர் ________ என அழைக்கப்படுகிறார்.

**A) மேயர்**

B) கமிஷனர்

C) பெருந்தலைவர்

D) தலைவர்

**22.** பொருத்துக.

| | |
|---|---|
| 1. நகராட்சிகள் | i) 15 |
| 2. மாநகராட்சிகள் | ii) 148 |
| 3. மாவட்ட ஊராட்சிகள் | iii) 36 |
| 4. பேரூராட்சிகள் | iv) 561 |
| 5. ஊராட்சி ஒன்றியங்கள் | v) 385 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| A) | i | iii | ii | iv | v |
| B) | ii | iii | i | v | iv |
| C) | iii | v | iv | ii | i |
| **D)** | **ii** | **i** | **iii** | **iv** | **v** |

**(குறிப்பு: தமிழ்நாட்டில் 12618 கிராம ஊராட்சிகள் உள்ளன.)**